# போலசை (Bolozi)



**வசிப்பிடம்:** வடக்குச் சிசுவான் மாநிலத்தின் சொங்பான் நகரத்தின் மேற்கில் உள்ள ஷியாவ் (Xiao) மற்றும் ஹெசுயி (Heshui) கிராமங்களிலும் அதைச்சுற்றியுள்ளப் பகுதிகளிலும் 1000 லிருந்து 2000 போலசை மக்கள் வசிக்கின்றனர். இன்னும் சில குறைந்த எண்ணிக்கை யிலானோர் தெற்கில் வென்சுஅன் (Wenchuan) மாவட்டம் வரைக்கும் மின் நதியோரங்களில் பரவலாக வசிக்கின்றனர். ஆரம்பக்கால மிஷனெரி ஒருவர் இவ்வாறு எழுதுகிறார் “வென்சுஅன் மாவட்டத்தில் பெரும்பாலானோர் சிங் (Qing) அல்லது கலப்பு இனத்தவர்கள் ஆவார்கள் இருந்தும் சில போலசை மக்களையும் இங்கே காணமுடியும்.”

**அடையாளம்:** ஷங் மற்றும் திபெத்திய மக்கள் இடையிலான கலப்புத் திருமணத்தின் விளைவாகப் போலசை இனம் ஒரு தனித்தன்மையான இனமாக உருவாகியிருக்கக்கூடும். இவர்களைப்பற்றிய விவரத்தை முதல் முறையாகக் கி.பி. 1930 ல் ஸ்காட்டிஷ் மிஷனெரி தாமஸ் டாரன்ஸ் (Thomas Torrance) எழுதினார். சீனா அதிகாரிகள் இவர்களைத் திபெத்தியர் மற்றும் ஷங் இவ்விரண்டு இனத்திலுமே இணைக்காததால் போலசை இனம் வெளியுலகத்திற்கு மறைந்துள்ளது. போலசை மக்கள் மத்தியிலும்கூடத் தங்களைத் திபெத்தியர்களென்று அறிமுகப்படுத்திக்கொள்ளும் வழக்கம் வளர்ந்துகொண்டிருக்கிறது. இன்னும் ஓரிரு சந்ததிகளுக்குப்பின் இவர்களுடைய தனித்துவமான இனப் பிரிவைப் பற்றிய நினைவுகள் இல்லாமற்போகும்.

**மொழி:** திபெத்திய பர்மிய மொழிப் பிரிவின் கிளையான ஷியங் கிளையைச் சார்ந்ததாக இருக்கக்கூடிய போலசை மொழியைப்பற்றிய தகவல்கள் மிகக்குறைவாகவே உள்ளன. அநேகப் போலசை ஆண்கள் மற்றும் குழந்தைகள் சீன மொழியைச் சரளமாகப் பேசக்கூடியவர்கள் ஆனால் பெரும்பாலான போலசைப் பெண்கள் பள்ளிக்கூடம் செல்லாததால் தங்கள் தாய்மொழியை மட்டுமே பேசுவார்கள்.

**வரலாறு:** கி.பி. 1960 வரைக்கும் போலசை மக்கள் அருகாமையிலுள்ள கிராமங்களைக் கொள்ளையடிப்பதில் பெயர்பெற்றவர்கள். திபெத்தியர் மற்றும் ஷங் மக்களின் கலப்பாகவுள்ள இவர்கள் நாகரீகப்படுத்தப்பட்டிராத முரட்டாட்டமானக் குணமுடையவர்கள். சுற்றியுள்ள மற்ற திபெத்திய சமுதாயங்களுக்குக் கூட இவர்கள் ஒரு சவுக்காக இருந்தனர். குதிரையேறி சமுதாயங்களைக் கொள்ளையடித்தனர், தங்களுக்கு விருப்பமானதைக் கொண்டு சென்றனர் மற்றும் தாங்கள் விரும்பினால் கொலையும் செய்தனர். இந்நாட்களில் இவர்கள் வடக்குச் சிசுவான் மலைகளில் விவசாயம் செய்துகொண்டும் கால்நடைகளை வளர்த்துக்கொண்டும் மிகவும் அமைதியான வாழ்க்கை நடத்திக் கொண்டிருக் கின்றனர்.

**பழக்கவழக்கங்கள்:** போலசை மக்கள் யாக், செம்மறியாடு மற்றும் ஆடு வளர்ப்பது, விவசாயம், திபெத்தியர்கள் மற்றும் ஹான் சீனர்களோடு வியாபாரம் செய்வது போன்ற அநேகத் தொழில்களில் ஈடுபடுகின்றனர். தொலை தூரங்களிலுள்ள இக்கிராமங்கள் வேகமாக ஓடுகின்ற நதிகளால் நீர்ப்பாய்ச்சல் அடைகின்றன. மரக்கட்டைகளைச் சங்கிலியால் கோர்த்துச் செய்யப்பட்ட தொங்கு பாலங்கள் நதிகளைக் கடக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

**மதம்:** திபெத்திய புத்தமதம் மற்ற திபெத்தியர்கள் மத்தியில் வேர்கொண்டதுபோல் இவர்கள் மத்தியில் வேர்கொள்ள முடியவில்லை. தங்கள் வாழ்க்கையை ஆட்சி செய்வதாக நம்பும் பழிவாங்கும் ஆவிகளைச் சமாதானப்படுத்த முயற்சி செய்யும் பழக்கமுடைய இவர்களில் அநேகர் ஆன்மவாதத்தை (Animism) பின்பற்றக்கூடியவர்கள்.

**கிறிஸ்துவம்:** போலசை மக்கள் சுவிசேஷத்தைக் கேட்டிராதவர்கள். கி.பி. 1949 ற்கு முன்பான மிஷனெரிப் பணிகளின் விளைவாக மிகக் குறைவான ஹான் மற்றும் ஷங் விசுவாசிகள் சொங்பான் பகுதிகளில் உள்ளனர். கி.பி. 1919 ல் சிசுவான் மாநிலத்தில் 543 வெளிநாட்டு மிஷனெரிகள் பணியாற்றிக் கொண்டிருந்தனர் இருந்தும்கூடத் தொலைவிலுள்ள மாநிலத்தின் இந்த வடக்குப் பகுதியில் பணியாற்றியவர்கள் மிகவும் குறைவு. தி சர்ச் ஆப் மிஷனெரி சொசைட்டி (The Church of Missionary Society) கி.பி. 1920 ல் சங்பனில் பணியைத் தொடங்கியது ஆனால் காட்டுத்தனமான போலசை மக்கள் மத்தியில் நாம் அறிந்த அளவு எந்த ஒரு சுவிசேஷப் பணியும் செய்யப்படவில்லை. இதனால் இந்நாள்வரையும் போலசை கிறிஸ்துவத்தால் தொடப்படாத மற்றும் சுவிசேஷம் சொல்லப்படாத இனமாக இருக்கிறது.




**Population in China:**
2,000 (1998)
2,110 (2000)
2,720 (2010)
**Location:** Sichuan
**Religion:** Polytheism
**Christians:** None Known

## மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:** Bolotse, Bolotsze, Po-lo-tzu

**மக்கள்தொகை:** 2,720

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, பர்மிய-லோலோ, லோலோ, வகைப்படுத்தப்படாத மொழி

**மொழி வழக்குகள்:** 0

**மதம்:** திபெத்திய புத்தமதம், பல கடவுள் வழிபாடு

**கிறிஸ்துவம்:** 0%

**வேதாகமம்:** இல்லை

**இயேசு திரைப்படம்:** இல்லை

**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** இல்லை

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL **குறியீடு** : இல்லை

**கிறிஸ்துவத்தின் நிலை**




- சுவிசேஷத்தைக் கேட்டிராதவர்கள்
- சுவிசேஷத்தைக் கேட்டும் இரட்சிக்கப்படாதவர்கள்
- ஏதாவது ஒரு கிறிஸ்துவப் பிரிவைப் பின்பற்றுபவர்கள்